www.tamilarangam.net

# நோர்வே வாழ் தமிழ் மக்களுக்கு
# ஒரு வேண்டுகோள்!

அன்பார்ந்த நோர்வே வாழ் ஈழ தேச மக்களே!

கடந்த சில காலமாக உங்கள் மத்தியில் வரும் பத்திரிகைச் செய்தி தொகுப்புக்களை, பிரசுரங்களை நாம்தான் உங்களுக்கு அனுப்புகிறோம். இவற்றில் குறைபாடுகள் இருப்பின் மன்னிக்க வேண்டுகிறோம். மக்கள் எமது போராட்ட நிலையை அறிய வேண்டும் என்பதற்காகவும் மக்கள் ஒரு கருத்துத் தெளிவினை பெறவேண்டும் என்பதற்காகவும் நாம் இதனைச் செய்கிறோம். இயக்கங்கள் விடும் பிரசுரங்கள் பெரும்பாலானவை அவற்றின் இராணுவ வீரசாகசங்களாகவ இருந்து வந்துள்ளன. விடுதலைப் புலிகள் தற்போது வெளியிடும் அறிக்கைகளில் பெரும்பாலானவை இப்படியே தான் இருக்கின்றன. இவை மக்களுக்கு எவ்வித விழிப்புணர்வை ஏற்படுத்தப் போவதில்லை. மாறாக மக்களை மேலும் பார்வையாளர்களாகவே வைத்திருக்கும் மனோநிலையை இவை உருவாக்குகின்றன. மக்களின் இத்தகைய மனோநிலையை தகர்க்கவும் அவர்களிடையே விழிப்புணர்வை ஏற்றபடுத்த நாம் மேற்கொள்ளும் சிறு முயற்சியே இதுவாகும்.

நாம் விடுகின்ற தொகுப்புக்கள், பிரசுரங்கள் புலிகளைப் பற்றியே அதிகமாக வருகின்றன என பலர் முணுமுணுப்பது எமது காதுகளுக்கு கேட்கின்றது. இங்கு ஒரு விடயத்தை மட்டும் தெளிவாக கூற விரும்புகிறோம். வெறுமனே புலிகள் எதிர்ப்பு வாதத்தில் நாம் நம்பிக்கை கொண்டவர்களல்லர். அது எவ்வகையிலும் பிரயோசன மற்றது என்பதில் நாம் உறுதியாக உள்ளோம். மற்றைய இயக்கங்களை பொறுத்தவரையில் மக்கள் மத்தியில் அம்பலப்பட்டுப் போய் இருக்கிற நிலையில் நாம் அவர்களைப் பற்றி பிரசுரங்கள் விட்டு நேரத்தினை வீணடிப்பதை நாம் விரும்பவில்லை. இவ்வியக்கங்கள் பாசிச நடவடிக்கைகள் தொடக்கம் குறுகிய வரலாற்றைக் கொண்டதாகும். இவர்களின் வரலாற்றை முழுமையாக புரிந்து கொள்வதன் மூலமே இவர்கள் யார் என்பதை புரிந்து கொள்ளலாம்.

இவர்களின் வரலாறு பதவிக்காக படுக்கையில் வைத்து கொலை செய்யத் தொடங்கியது முதல் கடல் கடந்து சென்று (உ+ம் பத்மநாபா படுகொலை) படுகொலை செய்யுமள விற்கு வளர்ந்து போயிருக்கிறது. இன்று தமிழ் மக்கள் மீது கடுமையான மிகவும் மோசமான ஒடுக்கு முறைகள் விடுதலையின் பேரால் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ளன. கட்டாய ஆட்சேர்ப்பு, பணவசூலிப்பு, கட்டாய பவுண் வசூலிப்பு, சிங்கள, முஸ்லீம் மக்கள் படுகொலை, வெளியேற்றம் என்பன இவர்களால் மேற்கொள்ளபடுகையில் உண்மையாக ஒரு தேசிய விடுதலை இயக்கத்தின் செயற்பாடுகளாக இவற்றை எவ்வகையிலும் ஏற்றுக் கொள்ள முடியாது. மாற்றுக் கருத்துக்கள் கொண்டவர்களை விரோதியாகக் கருதுவதும் படுகொலை செய்வதும் அவர்களை தடுப்பு முகாம்களில் வைத்திருப்பதும் ஒரு ஜனநாயக வழிமுறையைக்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கொண்டிருக்கும் ஒரு தேசிய விடுதலை இயக்கத்திற்குரிய குணாம்சங்களல்ல. இவர்கள் எமது போராட்டத்திற்கு தலைமை ஏற்க எவ்விதத்தில் தகுதியானவர்கள்? ஆயினும் தாமே தலைமையாளர்கள் என வரிக்கு வரி பிரச்சாரம் செய்து வருகின்றனர். ஏகாதிபத்தியங்களிடம் ஆயுத உதவியும் இஸ்ரவேலிடம் இராணுவப் பயிற்சியும் பெற்று இன்று தமது நலன்களுக்காக தமிழ் மக்களை அழிவுப் பாதைக்கு இட்டுச் சென்று கொண்டிருக்கிறார்கள். இன்று நாம் முக்கியமாக மூன்று நிலவரங்களை கணக்கில் கொள்ள முடியும்.

1. இலங்கை அரசின் இன அழிப்பு.
2. புலிகளின் அராஜக நடவடிக்கைகள்
3. மற்றைய இயக்கங்களின் துரோக நடவடிக்கைகள்

இவைகள் அனைத்தும் எமது விடுதலைக்கு முற்றிலும் பாதகமான போக்குகள். எமது போராட்டம் கருச்சிதைவு ஏற்பட்டதுபோல் மிகவும் துன்பகரமான நிலமைக்குள் மூழ்கிப் போயிருக்கின்றது. எனவே நாம் இவற்றை தவிர்க்கவும் ஆரோக்கியமான கருத்துச் சூழலுக்கான போராட்டத்தை ஏற்படுத்தவும் உங்களிடம் வேண்டுவது என்னவெனில் உங்கள் சிந்தனைகளை மாற்றிக் கொள்ளவதுதான். ஒரு பக்கமாகச் சிந்திப்பதை தவிர்த்துக் கொள்ளுங்கள். நின்று போராடுகிறார்கள். அவர்களை விட்டால் வேறு யார் என்ற உளுத்துப் போன பல்லவிகளைப் பாடாமல் உங்களுக்குள் கேள்விகளை ஏற்படுத்தி மற்றவர்களுடன் விவாதியுங்கள். சுதந்திரமாக கருத்துக்களைத் தெரிவித்து சரியான கருத்தினை உருவாக்கும் விவாதத்தை ஏற்படுத்துங்கள். ஒரு பொது அமைப்பை இதன் மூலம் உருவாக்கி நாம் ஒன்றுபட்டு துரோகிகளை அம்பலப்படுத்துவோம். அதன் மூலம் சிதைந்து போன எமது மக்களின் போராட்டத்தை சீரமைத்து புரட்சிகரமானதாக மாற்றியமைத்துக் கொள்ளுவோம். மக்களே வரலாற்றைத் தீர்மானிக்கிறார்கள்.

மாற்றம் வருவதில் மாற்றமேயில்லை!

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# ஈழப்போராட்டத்தை கொச்சைப்படுத்தும் ராஜீவ் காந்தி மீதான படுகொலை.

ராஜீவ் படு கொலை செய்யப்பட்டு விட்டார். இவரின் படுகொலை ஈழப்போராட்டத்தை எவ்வகையில் பாதித்துள்ளது என்பதை நாம் இங்கு பார்க்க வேண்டியுள்ளது. ஈழவிடுதலைக்காக போராடிக் கொண்டிருக்கும் நாம், எமது போராட்டத்தில் ஏற்பட்ட பிழையான அணுகுமுறை காரணமாக எமது நியாயத்தினை உலக மக்கள் புரிந்து கொள்ளாமல் இருக்கிறார்கள் என்பதை அறிவோம். அதேவேளை ஜனநாயகம் என கூக்குரல் இடும் மேற்கு நாடுகளும், ஏகாதிபத்திய நாடுகளும் தமது இருப்பை மூன்றாம் உலக நாடுகளில் உறுதிசெய்து கொள்ளுவதற்காக அபிவிருத்தி என்ற போர்வையில் தலையீடுகளை மேற்கொண்டு வருவது நாம் அறியாத ஒன்றல்ல. இலங்கையைப் பொறுத்தவரையில் மேற்கு நாடுகளுக்கு அதிக அக்கறை உண்டு. இவ்வக்கறை நிதி உதவிகள் மூலம் வெளிப்படுத்தப்பட்டு வருகின்றது. ஜனநாயகம் என்று இவர்கள் கூறுவது எல்லாம் தமது சுரண்டல், ஒடுக்குமுறை, அரசியல்படுகொலைகள், ஆட்சிக்கவிழ்ப்புக்கள் என்பவற்றை மூடி மறைப்பதற்கேயாகும். சுமார் நான்கு வருடங்களுக்கு முன்பு எமது போராட்டத்தை மழுங்கடிக்கக் கூடிய வகையில் ஒப்பந்தம் ஒன்று கைச்சாத்திடப்பட்டது. மக்களின் விருப்பு வெறுப்புக்களை கவனத்திற் கொள்ளாமல் இரு அரசுகளும் தம்மிஸ்டப்படி அதனைச் செய்து கொண்டன. ஒப்பந்தத்தினால் பெரிதாக எதுவும் நடைபெறவில்லை. புலிகளை வளர்த்த இந்திய அரசுக் கெதிராக புலிகளை சிறிலங்கா அரசு பயன்படுத்தியது. மக்கள் நம்பிக்கையிழந்தார்கள். இந்திய அரசு வெளியேறியதும் சிறிலங்கா அரசு புலிகளுடன் யுத்தம் நடாத்தியது. மாற்று இயக்கங்கள் இந்திய அரசுடனும் சிறிலங்கா அரசுடனும் தங்கி நிற்கத் தொடங்கினார்கள். விடுதலைப்போராட்டம் என்பது மாறி இலங்கை, இந்திய, சர்வதேச பிற்போக்குச் சக்தி களின் போட்டிக்களமாக தமிழ் மக்களின் போராட்டம் தலைகீழாக சிதைந்து போனது.

முக்கிய அரசியல் தலைவர்கள், புத்திஜீவிகள், கல்வி மான்கள், முற்போக்கு சக்திகள் என அனைவரும் புலிகளினால் வேட்டையாடப்பட்டனர். பலவீனமாகும் போது பேச்சுவார்த்தை எனவும் பின்பு யுத்தம் எனவும் தமிழ் மக்களின் போராட்டம் இழுபறியாகிப் போக சர்வதேச அளவில் இப்போராட்டத்திற்கான தார்மீக ஆதரவுகள் வெகுவாகக் குறைந்து போனது. இந்நிலையில் நாம் இந்திய அரசு எமது போராட்டத்தின்பால் கொண்டிருந்த அக்கறையைப் புரிந்து கொள்ளவேண்டும். இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் பொலிஸ் காரன் பதவியைப் வகிப்பதில் இந்தியா எப்போதும் தன்னை வெளிக்காட்டி வந்துள்ளது. இவ்வகையில் சிறிலங்கா அரசுக்கெதிரான தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டத்தை தனக்கு சாதகமாக்கிக் கொள்வதில் மிகுந்த அக்கறை காட்டியதுடன் விடுதலை இயக்கங்களுக்கு ஆயுத நிதி உதவிகளை அழித்து வந்தது. ஏகாதிபத்திய நாடு களின் நன்றியுள்ள ஜீவனாக தன்னை இனங்காட்டிக் கொள்வதில் சிறிலங்கா அரசு கொண்டிருந்த அக்கறையை முறியடித்து இந்தியாவின் கீழ் பணியவைப்பதற்கான முயற்சி களில் இவ்வியக்கங்களை சீராட்டி வளர்த்தது. சீக்கிய குழு ஒன்றை(பிந்தரன்வாலே தலைமையில்) இந்திரா காந்தி வளர்த்து இறுதியில் சீக்கிய தீவிரவாதிகளினதும் ஏகாதிபத்திய சதிகளிற்கும் பலியானது போல தமிழ் மக்களின் போராட்டத்தை தமது நலன்களுக்காக வளர்த்த இந்திய முதலாளித்துவம் ராஜீவ் காந்தியை அதற்குப் பலி கொடுத்துள்ளது. சர்வதேச பிற்போக்குச் சக்திகளின் கூட்டுச் சதியில் புலிகளின் உதவியுடன் இப்படுகொலை நடைபெற்றுள்ளது என இந்தியாவின் முக்கிய பத்திரிகைகள் செய்திகள் வெளி யிட்டுள்ளன.

இப்படுகொலையில் விடுதலைப்புலிகள் சம்பந்தப்பட்ட உறுப்பினர்கள் பங்கு கொண்டுள்ள தாக வெளியிடப்பட்ட செய்திகளால் தமிழ் நாட்டு மக்கள்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

எமது போராட்டத்தின் மீது எத்தகைய வெறுப்பு கொண்டுள்ளார்கள் என்பதை தி.மு.க கட்சி சந்தித்த மாபெரும் படுதோல்வி எடுத்துக் காட்டியுள்ளது. மக்கள் அளித்த தீர்ப்பு புலிகளை நிராகரித்துள்ள போக்கை வெளிக்காட்டி நிற்கின்றது. புலிகளை சீராட்டி வளர்த்த தி.மு.க மக்கள் முன் இருந்து தூக்கியெறியப்பட்டுள்ளது. சர்வதேச பிற்போக்கு சக்திகளின் கூலிப்படையாக தென் னாசியப் பிராந்தியத்தில் விடுதலைப் புலிகள் செயல்படுகின்றார்கள் என தலையங்கம் தீட்டிய இந்தியப் பத்திரிகைகள் தமிழ் மக்களின் போராட்டத்திற்கான இந்திய மக்களின் தார்மீக ஆதரவு இதனால் இழந்து போயிருக்கின்றது என்பதனையும் குறிப்பிட்டிருக்கின்றன.

எம்மைப் பொறுத்தவரைக்கும் தனிநபர்கள் கொல்லப்படுவதன் மூலம் எந்தப் பிரச்சினைகளும் தீரப்போவதில்லை என்பதில் நாம் உறுதியாக இருக்கின்றோம். இந்தியா எமது போராட்டத்தை தனது நலன்களுக்காகவே ஆதரிக்கும். ஆனால் ஈழம் மலருவதை அது எவ்வகையிலும் ஏற்றுக் கொள்ளாது. சிறிலங்கா அரசை அடிபணிய வைப்பதற்கான முயற்சியாக எமது போராட்டத்தை அது அணுகி வந்திருக்கின்றது. சர்வதேச பிற்போக்கு சக்திகளுக்கும் இந்தியாவுக்கும் நடைபெற்று வரும் ஆதிக்கப் போட்டியில் C.I.A உதவியுடன் முன்னர் இந்திராகாந்தி கொல்லப்பட்டதுபோல் இன்று புலிகளின் உதவியுடன் ராஜீவ் காந்தி கொல்லப்பட்டுள்ளார். இப்படுகொலையை சர்வதேச தொலைத்தொடர்பு சாதனங்கள் முக்கியத்துவம் கொடுத்து தலைப்புச் செய்திகளாக வெளியிட்டபோது புலிகளும் தமிழ் மக்களின் போராட்டமும் சம்பந்தப்படுத்தப்பட்டே வெளியிடப்பட்டன.

உலக மக்கள் தமிழ் மக்களின் போராட்டத்தை பயங்கரவாதத்தின் செயற்பாடாக கருத வேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்கு இப்படுகொலை தள்ளியிருக்கின்றது. ராஜீவ் ஒரு உத்தம மான மனிதர் என்றோ தமிழ் மக்களின் பால் அக்கறை கொண்டவர் என்றோ அல்லது ஒரு தலை சிறந்த ஜனநாயகவாதி என்றோ நாம் இங்கு கூற வரவில்லை. இந்திய உழைக்கும் மக் களின் மீதான ஒடுக்குமுறையை அவரது அரசும் மேற்கொள்ளத் தவறவில்லை. முதலாளித்துவ நலன்களையும் அதன் பிற்போக்குத் தனங்களையும் பேணிப்பாதுக்காக்கும் அவரது அரசு இந்திய மக்களின் சுபீட்சமான வாழ்க்கைக்கு வழி சமைக்கப் போவதில்லை. லஞ்சம், ஊழல், உழைக்கும் மக்களின் மீதான அடக்குமுறைகள், அதிகார வெறித்தாண்டவங்கள், அரசியல்வாதிகளின் பித்தலாட்டங்கள் இவையெல்லாம் இவரது அரசிலும் நீடித்தே இருக்கின் றன. ஆனால் தமிழ்நாட்டு மக்களின் அபிமானத்தை இழந்து பயங்கரவாதிகளாக ஈழமக்களை சந்தேகிக்கும் துர்பாக்கிய நிலைக்கு இப்படுகொலை தள்ளியிருக்கின்றது. இந்தி யாவில் தஞ்சம் கோரி வாழ்ந்த ஈழமக்களை திருப்பி அனுப்பவேண்டும் என்ற கோஷத்தை இந்திரா காங்கிரஸின் தமிழ்நாட்டுத் தலைவர் வாழப்பாடியும் அவரது சகாக்களும் முன்வைக்கும் அதேவேளை ஈழமக்கள் சுதந்திரமாக நடமாட முடியாத ஒரு சூழ்நிலைக்குத் தள்ளியிருக்கின்றது.

வரலாறு மிகப் பெரிய பொறுப்பினை ஒவ்வொருவர் மீதும் சுமத்தியுள்ளது. உலக மக்களுக்கு எமது நியாயமான போராட்டத்தினை புரிய வைக்கவேண்டும். இந்நிலையில் மக்களுக்கு எதிராக செயற்படும் விடுதலை இயக்கங்களை தமிழ் மக்கள் மத்தியிலும் சர்வதேச முற்போக்கு சகத்திகள் முன்னிலையிலும் அம்பலப்படுத்தவேண்டும். இதன் மூலம் உலக மக்களிடமிருந்தும் பாஸிஸ இயக்கங்களை அம்பலப்படுத்த முடியும். ஒடுக்கப்படும் தேசிய இனமாகிய தமிழ் பேசும் முஸ்லீம் மக்களின் உரிமையை தனித்துவத்தினை நாம் அங்கீகரிக்கவேண்டும். எமது போராட்டத்தினை வழிநடாத்துவதற்கு ஒரு புரட்சிகரமான தலைமையை உருவாக்கவேண்டும். இத்தலைமையானது மக்கள் நலன் பேணக்கூடிய மக்களால் தலைமை தாங்கக் கூடிய அமைப்பாக இருக்கவேண்டும். அப்போது தான் சரியான வழியில் போராட்டத்தினை வழி நடாத்த முடியும். மக்கள் சுதந்திரமாக வாழ முடியும்.

தவறுகளைத் திருத்துவோம்.

அமைப்பாக அணி திரளுவோம்

www.tamilarangam.net

# புலிகளின் புதிய முகமூடிகள்

புதிய வடிவத்தில் எமது மக்களை கொல்வதற்காக பணம் சேகரிப்பதற்காக உங்கள் முன் உண்டியலுடன் வருகிறார்கள். இதோ புதிய முகமூடி. தமிழர் புனர்வாழ்வுக் கழகம்(T.R.O). புலிகளினால் தற்போது சுயாதீன அமைப்பு என பிரச்சாரம் செய்யப்படுவதெல்லாம் பொய்யான ஒன்றாகும். இது தற்போது புலிகளின் ஒரு அமைப்பாக இயங்கி வருகிறது. T.R.O என்ற பசுத்தோலைப் போர்த்திக் கொண்டு தமிழ் மக்களை முட்டாளாக்கும் முயற்சிதான் இது. புலிகள் மேல் மக்கள் கொண்டுள்ள அபிப்பிராயம் பாதகமாகி வருவதால் அதன் காரணமாக நிதி உதவி குறைந்து போனதால் T.R.O மூலம் தமிழ் மக்களிடம் இருந்து நிதியைப் பெற்றுக் கொள்ள புலிகளின் புதிய அணுகுமுறையைக் கைக் கொள்ளுகின்றனர். ஜெர்மனியில் தமி ழ்த் திரைப்படங்களை தமிழர்புனர்வாழ்வுக் கழகம் ஊடாக விநியோகம் செய்து பணம் சம்பாதிக்கின்றனர் புலிகள். இப்பணத்தைக் கொண்டு தமிழர்புனர்வாழ்வு நடவடிக்கைகள் எதுவும் மேற்கொள்ளப்படுவதில்லை. மாவீரர் தினத்தை ஈழத்திலும் வெளிநாடுகளிலும் சிறப்பாகக் கொண்டாடவும், முத்தமிழ் விழாக்களை விமரிசையாக நடத்தவும் இப்பணம் பயன்படுத்தப்படுகின்றது. சொல்லப்போனால் புலிகளின் கவர்ச்சிகரமான ஸ்டண்ட் விளையாட்டுக்களுக்கே இவை பயன்படுத்தப்படுகின்றன. சிறிலங்கா அரசுக்கெதிராக புலிகள் நடாத்தும் தந்திரோபாயமற்ற நடவடிக்கைகளால் தினமும் பெருமளவில் பொதுமக்கள் கொல்லப்படுவதும் பாதிக்கப்படுவதும் நீங்கள் அறியாத ஒன்றல்ல. அண்மைக்காலங்களாக பெருமளவு மக்கள் வடபகுதியை விட்டு வெளிநாடுகளுக்கு ஓடித்தப்ப முயன்று வருகின்றனர். இதனை தடுத்த நிறுத்த வரிகளும் கப்பமும் அறவிடுகின்றனர். உண்மையில் மக்கள் புலிகளின் யுத்தத்தை ஆதரிக்கவில்லை. இந்த யுத்தம் மக்களின் பாது காப்பை எள்ளவும் கவனத்திற் கொள்ளப்படுவதில்லை. கடந்த மாதம் கொக்கட்டிச் சோலையில் புலிகள் மூன்று ராணுவத்தினரை கண்ணிவெடி மூலம் கொன்றதை அடுத்து இராணுவம் 150 தமிழ் மக்களை வெறி கொண்டு வேட்டையாடியது. மக்களை பாதுகாக்க வேண்டிய புலிகள் ஓடித் தப்பி விட்டார்கள். இவர்களின் யுத்தம் எள்ளவும் தமிழ் மக்களை பாதுகாக்க மேற்கொள்ளப்படுவதில்லை.

நூற்றாண்டு காலமாக தமிழ் மக்களுடன் சகோதரர்களாக வாழ்ந்து வந்த முஸ்லீம் மக்களை வடபகுதியில் இருந்து விரட்டியடித்ததோடு சக இனத்தை தாம் எப்படி நேசிக்கிறோம் என்பதை இனங்காட்டியுள்ளனர். யாழ்ப்பாணத்தில் முஸ்லீம்கள் வாழ்ந்த பகுதிகளை தடை செய்யப்பட்ட பிரதேசமாக மாற்றி அம்மக்களை சிங்களப் பிரதேசங்களில் அகதிகளாக வாழும் துர்ப்பாக்கிய நிலைக்குத் தள்ளியுள்ளனர்.

இவ்வாறான நிலமைகளை ஈழத்தில் சிருஸ்டித்து விட்டு வெளிநாடுகளில் இவற்றை நியாயப்படுத்தி அரசியல் செய்ய முடியும் புலிகள் மக்களிடையே ஏற்பட்டு வரும் விழிப்புணர்வு களை கவனத்திற் கொள்ளவும் தவறவில்லை. இதன் காரணமாக தமக்கு ஏற்பட்டு வரும் செல்வாக்கிழப்பையும் அதன்காரணமாக ஏற்பட்டு வரும் நிதியிழப்பையும் ஈடு செய்ய வேறு பெயர்களில் மக்கள் முன் வருகிறார்கள். தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தை நிதி தேவைக்காகவும் உலகத் தமிழர் இயக்கத்தை தமது அரசியல் நடவடிக்கைகளுக்காகவும் பயன்படுத்த முனைந்துள்ளார்கள்.

சர்வதேசரீதியாக புலிகள் பயங்கரவாத அமைப்பாக தம்மை இனங்காட்டி கொள்வதற்கான நடவடிக்கைகளை திறம்பட செய்துள்ளனர். முஸ்லீம் மக்கள் மீதான படுகொலை. அரசியல் தலைவர்கள் படுகொலைகள், தற்போது ராஜீவ் காந்தி படுகொலை மீதான சந்தேகம், இஸ்ரவேலியர்களிடம் பயிற்சி என்பன சர்வதேச முற்போக்கு சக்தி களிடையே புலிகளுக்கு கெட்ட பெயரை ஏற்படுத்தி தந்திருக்கின்றன. இவற்றை புலிகள் எக்காலத்திலும் மாற்ற முடியாத வகையில் அவர்களின் நடவடிக்கைகள் தொடருவதால் வேறு பெயர்களில் நடமாட முனைகின்றனர்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மக்களிடம் நாம் கேட்பது இதுதான். புலிகள் ஒரு தேசிய விடுதலை இயக்கம் என்றால் அத்தேசிய விடுதலைக்கான குணாதிசயங்களை இன்னமும் கொண்டிருக்கிறார்களா?. மக்கள் தமது போராட்டத்தை ஆதரிக்கிறார்கள் என்றால் ஏன் மக்கள் வடபகுதியை விட்டு அதிகமாக வெளியேற முற்படுகிறார்கள்?. மக்களுக்கு பாதுகாப்பு கொடுக்கிறோம் என்றால் கிழக்கில் நடைபெற்ற இராணுவ அனர்த்தங்களின் போது எங்கு போயிருந்தார்கள்?. மாற்றுப் பெயர்களில் மக்கள் முன் வரவேண்டிய அவசியம் என்ன?. உலகில் எந்த வொரு விடுதலை இயக்கமென்றாலும் இப்படி மாற்றுப் பெயர்களில் மக்கள் முன் வந்ததுண்டா?..... இவை போன்ற பல கேள்விகள் புலிகளை நோக்கி எழுகின்றன.

இது போன்ற கேள்விகள் உங்களிடமிருந்து எழவேண்டும் உங்கள் சிந்தனைகள் குறுகிய வட்டத்திற்குள் நிற்காமல் பரந்தளவில் எமது மக்களின் எதிர்காலத்தை நோக்கியதாகவே விரிவடைய வேண்டும். ஒரு பாசிசத்தை மக்கள் ஆரம்பத்தில் அடையாளங் காணுவது எப்போதும் சிரமமாகவே இருந்திருக்கிறது. ஜெர்மனியில் ஹிட்லரை ஆதரித்த மக்கள் இரண் டாம் உலகப்போரில் லட்சக்கணக்கில் அழியவில்லையா?. கம்பூச்சியாவில் பொல்பொட்டின் ஆட்சியில் எத்தனை லட்சம் மக்கள் கொன்றொழிக்கப்பட்டார்கள்?. இப்பாசிசவாதிகள் காலாகாலம் மக்களின் முன் ஏதாவது ஒரு வடிவில் தோன்றிக் கொண்டே இருப்பார்கள்.

இவர்களை நாம் அடையாளங்காண மறுத்தால், அம்பலப்படுத்த மறுத்தால் நாம் அதற்கு பலியாகி விடுவோம் என்பதை வரலாற்றின் கடந்த கால பாடங்கள் எமக்கு படிப்பினையாக அமையட்டும்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# பாவிகளின் பக்கங்கள்

*- தயாநிதி -*

யாழ்ப்பாணத்தில் தலைமுறை தலைமுறையாக வாழ்ந்து, இன்று இலங்கையில் ஒரு பிரதேசத்திலும் வாழ முடியாமல் தவிக்கும் ஒரு மனிதன் எழுதிய கடிதத்தில் இருந்து பிரதானமான சில பகுதிகள்.

ஐப்பசி 22ம் திகதி (1990) ....திடீர் என வடக்கில் ஒரு கெட்ட சூறவளி ஆரம்பித்தது. சாவகச்சேரி முஸ்லீம் மக்கள் சகலரையும் பழைய உடுப்புக்களுடன் மட்டும் அங்கிருந்து வெளியேற்றி வவுனியாவுக்கு அப்பால் அனுப்பினார்கள். அதைத் தொடர்ந்து கிளிநொச்சி, வட்டக்கச்சி, நாச்சிக் குடா, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய இடங்களில் உள்ள சகல முஸ்லீம்களையும் 1500 ரூபாவுடன் பழைய உடுப்புக்களுடனும் முற்று முழுக்க வெளியேற்றினார்கள். யாழ் முஸ்லீம்கள் இந் நிலைமைகளை அறிந்து புலிகளிடம் இது பற்றி விளக்கம் கேட்டார்கள். தமது நிலைமை பற்றியும் விசாரித்தார்கள். புலிகள் "யாழ் முஸ்லீம்கள் வெளியேறத் தேவையில்லை. நீங்கள் இங்கேயே இருக்கலாம்" எனக் கூறினார்கள். நம்பி மக்கள் இருந்தார்கள்! இறுதியில் கார்த்திகை 30ம் திகதி காலை 7.00 மணிக்கு யாழ் முஸ்லிம் வட்டாரத்தை சுற்றி வளைத்து சகல முஸ்லீம் மக்களையும் அங்குள்ள மைதானத்துக்கு அழைத்து இரண்டு மணித்தியாலத்துக்குள் யாழ் முஸ்லீம் மக்கள் யாழ்ப்பாணத்தை விட்டு வெளியேற வேண்டும் எனக் கூறினார்கள். வீடுகளுக்குச் சென்று மக்கள் தமது பணம், நகை, புதிய உடுப்புகள் ஆகியவற்றை அடுக்கிக் கொண்டிருந்த போது ஆயுதங்களுடன் உட் புகுந்து புலிகள் சகலதையும் கொள்ளை அடித்தார்கள். உடனடியாக சகலரையும் வெளியே விட்டு கதவுகளைப் பூட்டி திறப்பை எடுத்துக் கொண்டார்கள். புலிகளால் குறிப்பிடப்பட்ட வீதியில் சென்ற முஸ்லீம் மக்கள் இடையில் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டார்கள். அப் பரிசோதனையில் பெட்டியிலும், உடலிலும் மறைத்து வைக்கப்பட்டிருந்த எஞ்சிய நகைகள், பணம் புதிய உடுப்புகள் சகலதும் மீண்டும் கொள்ளையடிக்கப்பட்டது. ஒரு ஆளுக்கு 20ரூபா வீதம் கொடுத்து இனிமேல் நீங்கள் இங்கு வரக்கூடாது "உங்களுக்கு புத்தளமும், அம்பாறையும் ஒதுக்கப்பட்டுள்ளது ஓடிப்போய் அங்கு குடியேறுங்கள்" என்று சொல்லி அனுப்பினார்கள். மக்களோடு மக்களாக நானும் உடமைகளை இழந்து இப்போது கொழும்பில் இருக்கிறேன். நண்பர் தற்போது வேறு வீட்டில் நிக்கிறார். நண்பர் புலிகளின் தொல்லையால் இந்தியா சென்று விட்டார். அவர்களின் வீட்டை புலிகள் கைப்பற்றி விட்டதாக அறிகிறேன்.

தற்பொழுது காசோ, பொருளோ, வீடோ இல்லாத நிலையில் நான் கொழும்பில் அல்லது வேறு இடத்திலோ சீவிக்க முடியாதுள்ளது. எனது மூன்று பிள்ளைகளும் மனைவிக்கும் உணவு கொடுப்பது பெரும் பிரச்சனையாக உள்ளது...!

வடக்கில் நீண்ட கால வரலாற்று பாரம்பரியத்துடன் தமக்கு சொந்தமான நிலங்களில் வாழ்ந்து வந்த முஸ்லீம் மக்கள் இவ்வாறு புலிகளினால் துப்பாக்கி முனையில் விரட்டி அடிக்கப்பட்டுள்ளனர். இதனால் மனம் மகிழ்ந்து போகிற, மனித நேயம் அற்ற குரூரமானவர்களாக இருக்கின்றனர். புலிகள் செய்தால் அதற்கு ஏதாவது நியாயமான காரணம் இருக்கும் என்று கூறிக் கொண்டிருக்கும் மர மண்டைகள் இருக்கின்றன. முட்டாள் தனமான வேலையை புலிகள் செய்து விட்டனர். இதற்கு எப்படி சப்புக் கட்டுவது என யோசித்துக் கொண்டு பல செந்தாமரைகள் இருக்கின்றன. ஆனால் ஒட்டு மொத்தமாகவே தமிழினம் இந்த கொடுமையை ஏற்றுக் கொண்டுவிடவில்லை. மனித நேயமும் மனச்சாட்சியும் நிறைந்த தமிழர்கள் முஸ்லீம்களின் இந்த வெளியேற்றத்தை கண்டிக்கிறார்கள். நடந்த சம்பவத்திற்கு கண்டனம் மட்டும் அல்ல மறுபடியும் இந்த முஸ்லீம் மக்கள் தமது நிலங்களில் கௌரவமாக குடி அமர்த்தப்பத வேண்டும் எனவும் வலியுறுத்துகின்றனர்.

கனடாவில் உள்ள தாயகம் பத்திரிகை, கலை இலங்கிய மன்றம் (தமிழர் வகை துறை வள நிலையம்) மனித உரிமைகளுக்கான இலங்கையர்கள் ஆகிய நிறுவனங்கள் முஸ்லீம் மக்கள் மீதான புலிகளின் நடவடிக்கையை வன்மையாக கண்டித்துள்ளன.

வடக்கு கிழக்கினை தாயகமாகக் கொண்ட முஸ்லீம் மக்களின் தனித்துவம், தனியான கலாச்சாரப்பண்பாட்டு விழுமியங்களும், அவர்களுக்குரிய நிலங்களும்; இலங்கையிலுள்ள அனைவராலும் ஏற்கப்பட வேண்டும். முஸ்லீம் மக்களின் இந்த சிறப்புகளை யாரும் ஏற்றுக் கொள்ளாது போனால் கூட முஸ்லீம் மக்கள் இவற்றை நிலை நிறுத்தியே தீர்வார்கள்! இலங்கையில் இருந்து தமிழ் மக்கள் பாதுகாப்பு பேரவை வெளியிட்ட துண்டுப் பிரசுரம் ஒன்று பார்வைக்கு எட்டியது. அதிலிருந்து சில பகுதிகள்.

இலங்கை இனவெறி அரசு தனது முழுபலத்தையும் பிரயோகித்து தமிழ் மக்கள் மீது காட்டுமிராண்டித்தனமான தாக்குதல் நடத்திக் கொண்டிருக்கும் இவ்வேளையில், அதற்கு எதிராக அனைத்து சக்திகளையும் ஐக்கியப்படுத்தி அதன் மூலம் உறுதியான போராட்டத்தை தொடுத்து, தமிழ் மக்களைப் பாதுகாக்க வேண்டிய தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் இலங்கை, இந்திய அரசுகளை ஆரம்பம் முதல் உறுதியாக எதிர்த்து வந்த 'பேரவை'யுடன் ஐக்கியப்படுவதற்கு மாறாக அதன் மீது நெருக்கடியை கொடுத்துள்ளது. பேரவையின் பத்துக்கு மேற்பட்ட இளைஞர்களை புலிகள் இயக்கத்தினர் கைது செய்துள்ளனர். இன்னும் பலர் தேடப்படுகின்றனர். கைது செய்யப்பட்டவர்களின் நிலைபற்றி அவர்களின் நெருங்கிய உறவினர்களுக்கும் கூட தெரிவிக்கப்படவில்லை. பல போராளிகளைக் கொன்று குவித்தும், இன்னும் பல போராளிகளை சிறையில் அடைத்து பொய் வழக்குகள் சோடித்தும், எத்தனையோ பொய்ப்பிரச்சாரங்கள் புரிந்தும் பேரவையை அழிக்க முயற்சிக்கும் இலங்கை இந்திய அரசுகளின் நோக்கத்தை நிறைவேற்றுவதாகவே இது இருக்கிறது. இதனால் இலங்கை இந்திய அரசுக்கு எதிரான புலிகளின் யுத்தம் தமிழ் மக்களின் நலனுக்கான யுத்தம் தானா? என்று சந்தேகத்தை எழுப்புகிறது. உருவாகும் இந் நிலைமையை உண[illegible]து பேரவை மீதான தடையை நீக்கி இலங்கை

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

அரசுக்கெதிரான போராட்டத்தில் பேரவையையும் ஐக்கியப்படுத்தும் முயற்சியில் புலிகள் இயக்கம் ஈடுபட வேண்டும்.
இவ்வாறு பிரசுரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

தமிழ் மக்களின் தேசிய விடுதலைப் போராட்டம் பின்னடைவுக்குள்ளாகி விட்டது. இப் போராட்டத்தை வேரோடு ஒட்ட பிடுங்கிவிடுகிறேனென இனவெறிகொண்ட ஸ்ரீலங்கா அரசுமூர்க்கத்தனமான தாக்குதல்களிலும், அழிவு வேலைகளிலும் ஈடுபட்டு வருகிறது. ஏராளமான மக்கள் கொல்லப்பட்டு வருகின்றனர். முன்னெப்போதுமில்லாத வகையில் பெரும் அச்சுறுத்தலும் பயங்கரமான பீதியும் நிலவுகிறது. கொலைகார இராணுவத்தின் துப்பாக்கிக்கும், விமானதாக்குதல்களுக்கும் மட்டுமின்றி உயிருக்காக தப்பி ஓடும் போது கொத்தளிக்கும் கடலுக்கும், மலை விரித்தாடும் பட்டினிக்குமாய் இறந்து போனவர்களின் எண்ணிக்கை அதிகரித்துச்செல்கிறது. அமைதியும் சமாதானமும் நிறைந்த வாழ்வுக்காக மக்கள் ஏங்குகின்றனர்.

இத்தகையதொரு சூழ்நிலையில் தமிழ் மக்களின் அனைத்து சுதந்திரங்களையும் துப்பாக்கி முனையில் அடக்கி வைத்திருக்கும் தமிழீழ விடுதலைப்புலிகள் மக்களிடமிருந்தும் சர்வதேசரீதியாகவும் தாம் அந்நியப்பட்டு வந்த இந்த வேளையில் தமிழ் மக்களிடையே இருக்கின்ற அனைத்து ஜனநாயக சக்திகளையும் அழித்தொழிக்க முற்பட்டுள்ளனர். தமிழ் மக்களின் இன்றியமையாத தேவையான விடுதலைப்போராட்டத்தை வலிந்து குத்தகைக்கு எடுத்துக் கொண்டிருக்கும் புலிகள் மக்களிடம் அரசியல் ரீதியாக முன் செல்ல முடியாத தமது அரசியல் வறுமையால் ஆயுதங்களின் மூலம் எஞ்சியிருக்கும் அரசியல் சக்திகளையும் ஒழிக்க தீவிரமாக ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றனர்.

கடந்த காலங்களில் அமைப்புக்களின் தவறான போராட்ட வழிமுறைகள், ஜனநாயக விரோத போக்குகளாலும், அமைப்புக்களின் செயற் திறனற்ற தன்மைகளாலும் இவ்வமைப்புக்களை விட்டு விலகி ஒதுங்கி இருந்த ஜனநாயக சக்திகளும் மற்றும்NLFT, PLFT, தமிழ் மக்கள் பாதுகாப்பு பேரவை, தீப்பொறிக்குழு ஆகிய மக்கள் ஜனநாயக சக்திகளையும் தேடி அழிக்கும் வெறிச் செயலில் புலிகள் முனைந்துள்ளனர். இவ்வாறு 400க்கும் அதிகமான ஜனநாயக சக்திகளை புலிகள் ஏற்கனவே கொலை செய்துள்ளனர்.

**மக்கள் நேச சக்திகளான இந்த நபர்களையும், அமைப்புக்களையும் தேடியழிக்க வேண்டிய புலிகளின் நோக்கம் என்ன?**

**இந்திய வல்லாதிக்கத்திற் கெதிரான யுத்தத்தில் சோரம் போனவர்கள் ஒரு புறமிருக்க புலிகளின் நிலைப்பாட்டை உறுதியாக ஆதரித்த இவர்களை இன்று புலிகள் தேடியது எதற்காக?**

**விடுதலைப் போராட்டத்தில் உறுதியாக இருந்து பாசிச ஸ்ரீலங்கா அரசுக்கெதிராக நடவடிக்கையில் ஈடுபடும் இவர்களை புலிகள் கொன்றொழித்து சாதிக்கப் போவது என்ன?**

புலிகள் தமது காட்டுத்தனமான நடவடிக்கையால் தமிழ் மக்களுக்காக போராடும் ஜனநாய சக்திகளை அழித்து தமிழ் மக்களுக்கு மீண்டும் துரோகம் செய்துள்ளனர். புலிகளின் இந்த வெறிச் செயல் வன்மையாக கண்டிக்கப்பட வேண்டிய செயலாகும். தமது செயலை நியாயப்படுத்த புலிகளலேயே முடியாது போய்விட்டது. புலிகளின் நடவடிக்கையால் மனம் கொதித்துப் போயுள்ள மக்கள் துப்பாக்கி முனையில் அடக்கப்பட்டு வருகின்றனர்.

தமது ஜனநாயக விரோதமான போக்குகளால் புலிகள் மக்கள் மத்தியிலிருந்து அம்பலமாகிப் போயுள்ளனர். போராட்டப் பாதையில் உள்ள புலிகளின் பாரிய தவறுகள் பெரும் பின்னடைவுகளை ஏற்படுத்தியுள்ளது. போராட்டம் ஒரு இடிபாடுகளுக்குள் சிக்கிக் கொண்டதுபோல் அகப்பட்டு முன்னேற முடியாது தவிக்கிறது. மக்கள் மத்தியிலிருந்து புலிகளின் தவறுகளுக்கு மக்களே 'விலை'கொடுக்க வேண்டி ஏற்பட்டது. மக்கள் அதிகமாகவே அதிருப்தியடைந்துள்ளனர். இந்நிலையில் மக்கள் மீது புலிகள் தமது அராஜகங்களை மேலும் கட்டவிழ்த்து விடத் தொடங்கிருர்கள் யாரவது பேசினுல், எழுதினுல், நிமிர்ந்து நின்றுல் அவர்கள் தமது எதிரிகள் என்றே தீர்மானித்தனர்.

தமிழ் மக்களுக்கு ஜனநாயகத்தை வழங்க மறுத்தவர்கள் சிங்கள, முஸ்லிம் மக்கள் மீதும் தமது கரங்களை பரவவிட்டனர். சிங்களக் கிராமங்களுக்குள் சென்று ஏராளமான அப்பாவி சிங்கள மக்களை கொன்றனர். வடக்கு கிழக்கு பிரதேசங்களை தாயகமாகக் கொண்டு வாழ்ந்து அந்நிலத்தின் பூரண உரித்தான முஸ்லீம் மக்களையும் அப்பிரதேசங்களை விட்டு மிரட்டி வெளியேற்றியுள்ளனர்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் இந்த ஜனநாயக விரோத போக்குக்களாலும் அரசியல் குருட்டுத்தனங்களாலும் மக்கள் மத்தியில் இருந்தும், ஏனைய சமூகங்களிலுருந்தும், சர்வதேச ரீதியாகவும் தனிமைப்பட்டுப் போயுள்ளனர்.

இவர்களுக்கு ஏற்பட்டுள்ள இந்த நெருக்கடியிலிருந்து மீளுவதற்கு ஒரே வழி தமிழீழ விடுதலைப்புலிகள் தங்கள் கருத்துக்களையும் செயற்பாடுகளையும் பரிசீலித்து மீளமைப்புச் செய்து கொள்வதேயாகும். இவர்கள் இவ்வாறு செயற்படுவது தமிழீழ மக்களின் விடுதலைக்கு செய்கின்ற மாபெரும் பணியாக இருக்கும். ஆனுல் இவர்கள் இதனை செயயப் போவதில்லை, மாறாக தமக்கு எதிராக மக்கள் மத்தியிலுள்ள கருத்துக்கள் புதிய சக்தியாக உருவெடுத்து விடுமோ? என்று பிரமை பிடித்துப் போயுள்ளனர். இதனுலேயே 400க்கும் மேற்பட்ட ஜனநாயக சக்திகளை அண்மையில் வேட்டையாடி கொன்று தீர்த்தார்கள்.

ஜனநாயக விரோத போக்குக்களும், பாசிச வழிமுறைகளையும் கையாள்வது மக்களை எப்போதும் அடக்கி, ஒடுக்கி துப்பாக்கி முனையில் ஆள்வதற்கு பயன்படப் போவதில்லை. இவ்வாறு மக்களைஅடக்கியாள்வது ஒரு போதுமே முடியாது என்பதே உண்மை. கடந்த காலத்தில் பல வரலாறுகளை இதற்க ஆதாரமாகக் கொள்ளலாம். தமிழ் மக்களுக்கும் தமக்கு மேலாக திணிக்கப்பட்டுள்ள அடக்கு முறைகளை தகர்த்து எழுவார்கள் என்பதில் எந்த சந்தேகமுமில்லை!

www.tamilarangam.net

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# சிங்கள தமிழ் உழைக்கும் மக்களின் ஒற்றுமை சாத்தியமற்றதா?

..ர தமிழ மக்கள் பாதுகாப்பு பேரவையின் வெளியீடு ஒன்றில் இரு; து எடுக்கப்பட்டு விவாதத்திற்காக இங்கு பிரசுரிக்கப்படுகிறது. இக்கட்டுரை தொடர்பாக தங்கள் கருத்துக்களை எழுதுங்கள்

சிங்கள மக்கள் இனவெறியில் மூழ்கியுள்ளனர். அவர்களுடன் ஒன்றிணைப்பு சாத்தியப்பாடே இல்லையென்று கூறுகின்றனர். இவர்கள் இந்த முடிவுக்கு எவ்வாறு வந்தனர்? தமிழ் ஈழ நாட்டுக் கோரிக்கைக்கு சிங்கள மக்கள் ஆதரவு தரவில்லை அதற்காக அவர்களும் போராட முன்வரவில்லை என்பதில் இருந்து இந்த முடிவுக்கு வந்தார்களா? தமிழ் ஈழ தனிநாட்டுக் கோரிக்கைக்கு சிங்கள மக்கள் ஆதரவளிக்க வேண்டுமெனக் கருதுவது தர்க்க நியாயமற்ற எதிர்பார்ப்பாகவே இருக்க முடியும்.

ஏனெனில் இக் கோரிக்கை 1. நாட்டை துண்டு போடுவதாக இருக்கின்றது. 2. இலங்கை பாசிஸ்ட் அரசால் ஒடுக்கப்படும் சிங்கள மக்கள் பற்றி எவ்வித அக்கறையும் கொண்டதாக இல்லை. இலங்கை இனவெறி அரசிடமிருந்து தமிழ் மக்களை விடுவிக்கும் நோக்கம் கொண்டதாகவே இருக்கிறதேயன்றி சிங்கள மக்களை அந்த அரசின் அடக்கு முறையில் இருந்து விடுவிப்பதாக இல்லை. சாரசம்சத்தில் தமிழ் ஈழக் கோரிக்கை இலங்கை அரசை ஒழிக்கும் திட்டமாக இல்லை. மாறாக இனவெறி அரசுடன் சிங்கள மக்களுக்கெதிராக ஒரு உடன்பாட்டுக்க வருவதாகவே உள்ளது. இவ்வாறு இருக்கும் போது இக்கோரிக்கைக்கு ஆதரவாக சிங்கள மக்கள் தம்முடன் இணைந்து போராட வரவேண்டுமென இவர்கள் எவ்வாறு எதிர்பார்க்க முடியும்? போராடினாலும் இருவருக்கும் பொதுவான கோரிக்கையின் அடிப்படையில் போராடாத போது அவர்கள் ஒருவருக்கொருவர் ஆதரவு அளிப்பார்களென எதிர்பார்க்க முடியாது என்பதேயாகும். அதேபோல் சிங்கள மக்களுக்கும் சேர்த்து முன் வைக்கப்படாத தமிழ் ஈழக் கோரிக்கைக்கு எப்படி சிங்கள மக்கள் ஆதரவளிப்பார்கள்?

உண்மை என்னவெனில் தமிழ் மக்கள் மீதான ஒடுக்கு முறையில் ஈடுபடுகிறவர்கள் இலங்கை அரசும், அதன் ஏவல் நாய் இராணுவமும், சில சிங்கள இனவெறியர்- களுமேயன்றி சிங்களப் பொதுமக்கள் அல்ல என்பதையும் தமிழ் ஈழக் கோரிக்கையை முன்வைப்பவர்கள் கூட ஏற்றுக் கொள்ளுவர். பரந்துபட்ட சிங்கள மக்கள் தமிழ் மக்களுக்கு எதிரான தாக்குதலில் ஈடுபடுவதில்லை. சிங்கள மக்களனைவரும் இன வெறியர்களாகி தமிழ் மக்களுக்கு எதிரான தாக்குதலில் ஈடுபடுவர்களேயாகுல் இலங்கையில் ஒரு தமிழர் கூட மிச்சமுடியாது. மாறாக தம் உயிரை பயணம் வைத்து தமிழ் மக்களை காப்பாற்றிய சிங்கள மக்கள் ஏராளம். மேலும் சிங்கள மக்களிடையே தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையை அங்கிகரிக்க வேண்டும் எனக் கொரும் அமைப்புக்கள் ஏராளமாய் இருக்கின்றன. பல்வேறு தொழிற்சங்கங்களின் கூட்டமைப்புக்கள் தமிழருக்கெதிரான வன்முறையை மட்டுமல்ல ஒடுக்கு முறையையும் கூட கண்டித்திருக்கின்றன.

எனவே சிங்கள மக்களனைவரும் இனவேறிக்குட்பட்டுள்ளனர் என்பது தவறான கூற்றாகும். அத்தோடு இவர்களின் தமிழ் ஈழத் தனிநாட்டுக் கோரிக்கை இலங்கை அரசு சிங்கள மக்களிடையே மேலும் இனவாதத்தை தூண்டிவிடவும், தமிழ்மக்கள் மீது அவநம்பிக்கையையும், பகைமையையும் தூண்டிவிடவும் இதன் மூலம் தமிழ்-சிங்கள உழைக்கும் மக்களின் அய்க்கியம் சாத்தியமற்றதாக செய்யவும் மட்டுமே உதவும். அத்துடன் சிங்கள மக்களின் விடுதலைக்கும் சேர்ந்து ஒரு திட்டத்தை முன் வைக்காமல் தமிழ் சிங்கள மக்களின் அய்க்கியம் பற்றிப் பேசும் இவர்கள் அரசியல் ஞானம் நமக்கு சந்தேகத்தைக் கொடுக்கிறது.

**(2) அய்க்கியத்திற்கு முன் அழிவு என்பது புனைகதையே:-**

இரண்டாவதாக சிங்கள மக்கள் தம்முடன் அய்க்கியப்படும் வரை பொறுத்திருப்பது தமிழ் மக்களின் முழுமையான அழிவுக்கு அனுமதிப்பது போனடறதாகும் என்கின்றனர். இனவெறி பாசிஸ அரசை சிங்கள தமிழ் உழைக்கும் மக்கள் ஒன்றுபட்டு தூக்கி எறிந்துவிட்டு ஒரு மக்கள் ஜனநாயகக் கடியரசை இலங்கையில் நிறுவ வேண்டும். அது மட்டுமே தமிழ் மக்களுக்கு இன ஒடுக்கு முறையில் இருந்தும், வர்க்க ஒடுக்கு முறையில் இருந்தும், விடுதலை தரும். என நாம் சுட்டிக் காட்டும் போது தமிழ் சிங்கள உழைக்கும் மக்களின் அய்க்கியம் சாத்தியப்படும் வரை பாசிஸ இனவெறி அரசுக்கு எதிரான போராட்டத்தை கைவிட வேண்டுமென எவ்விடத்திலும் கூறவில்லை. மாறாக இலங்கை இனவெறி அரசின் ஒடுக்கு முறைக்கு எதிரான போராட்டத்தை அந்த அரசை தூக்கி எறிந்துவிட்டு இலங்கையில் ஒரு மக்கள் ஜனநாயகக் குடியரசு அமைக்கும் திட்டத்தின் அடிப்படையில் நடத்த வேண்டுமென்றே நாம் சுட்டிக் காட்டுகின்றோம்.

இத்தகைய திட்ட... சிங்கள தமிழ் உழைக்கும் மக்களின்

www.tamilarangam.net

பொது எதிரியைத் தூக்கி எறிந்து விட்டு இருவருக்கும் பொது பொதுவான ஜனநாயகக் குடியரசை தருவது என்பதால் தமிழ் சிங்கள மக்கள் ஈப்போராட்டத்தில் அய்க்கியப்படுவது சாத்தியம் என்றே நாம் கருதுகின்றோம். எனவே இத்தகைய திட்டத்தை வைத்து அய்க்கியத்தை ஏற்படுத்துவதை விடுத்து தமிழ் சிங்கள உழைக்கும் மக்கள் அய்க்கியப்படுமுன் தமிழ் இனமே முற்றாக ஒடுக்கு முறையால் அழிந்துவிடுமெனக் கூறுவது வர்க்கப் போராட்டப் பாதையை திசைதிருப்புவதற்கானதந்திரமன்றி வேறல்ல.

**(3) அய்க்கியத்திற்கான முயற்சி இதுவரை இருந்ததில்லை:-**

மூன்றுவதாக தமிழ சிங்கள மக்களின் ஒன்றிணைப்பை குருட்டாம்போக்கில் நிராகரிக்க வில்லையென்றும், கடந்த நாலு சகாப்தமாதக அதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப் பட்டன என்றும் கூறுகிறார்கள். இலங்கை இன வெறி ஆளும் வர்க்கங்களையும் அரசமைப்பையும் தூக்கியெறிந்து விட்டு ஒரு மக்கள் ஜனநாயகக் குடியரசு அமைக்கும் நோக்கத்தற்காக எப்போதுமே ஒரு திட்டம் வைத்து இவர்கள் செயல்பட வில்லை. அவ்வாறு இருக்க நான்கு சகாப்த்தங்களாக தமிழ் சிங்கள மக்கள் ஒன்றிணைப்புக்க முயன்றதாக இவர்கள் கூறுவது தவறுன வாதமாகும். ஒருவேளை இலங்கையில் இன்றைய அரசியல், பொருளாதார அமைப்பை அங்கீகரித்துக் கொண்டு பாராளுமன்றத்தில் பங்கெடுத்துக் கொண்டிருந்த இலங்கை அரசின் தமிழின ஒடுக்கு முறையை எதிர்த்து சாத்வீகப்போராட்டங்களை நடத்திக் கொண்டிருந்த கடந்த கால செயற்பாடுகளை குறிப்பிட்டவர்களாயளின் அது தமிழ் சிங்கள மக்களை அய்க்கியப் படுத்துவதற்கான முயற்சி அல்ல. மாறுக இலங்கை ஆளும் வர்க்கங்களுடன் அதிகாரத்தை பகிட்டுக் கொள்வதற்கான தமிழ் இன முதலாளிகளின் முயற்சியாகும் என்பதை நாம் சுட்டிக் காட்ட வேண்டும். இன்றைய சமுதாய அமைப்புத்தான் இலங்கை ஆளும் வர்க்கங்கள் இனவெறியைத் துன்டிவிட்டு தமிழ் சிங்கள மக்களை பிளவு படுத்தவும், மோதவிடவும் காரணமாக இருக்கின்ற போது அந்த சமுதாய அமைப்பை ஏற்று செயல்பட்ட செயல்பாடுகளை திழ் சிங்கள மக்களின் அய்க்கியத்திற்கான செயல் பாடுகள் எனக் கூறுவது முரன்பாடானதாகும். இன்று மட்டுமல்ல என்றுமே இவர்கள் இலங்கை மக்களின் அய்க்கியத்திற்கு வழி வகுக்கக் கூடியதும், இன ஒடுக்கு முறைக்கும், சுரண்டும் வர்க்க ஒடுக்கு முறைக்கும் முடிவு கட்டக் கூடியதுமான ஒரு மக்கள் ஜனநாயகத் திட்டத்தின் அடிப்படையில் செயல் பட்டது இல்லை என்பதே எமது விமர்சனமாகும்.

**(4) ஏகதிபத்திய எதிர்பு அல்ல ஆதரவே:-**

நான்காவதாக இலங்கை அரசு அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் நவ காலனி அரசாக உள்ளது. எனவே இன்றைய இனவெறி அரசை எதிர்த்த போராட்டம் ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராட்டமும் ஆகும். மேலும் உருவாகும் தமிழ் ஈழத்தில் எவ்வித ஏகாதிபத்தியங்களும் இடமளிக்கப்படாது என்கின்றுர்கள். இலங்கை அரசு ஒரு அமெரிக்க நவ காலனி அரசு என்றுல், இவர்கள் ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராட்டம் உண்மையாளுல் இலங்கை முழுவதிலும் அல்லவா இருந்து அமெரிக்கா ஏகாதிபத்தியத்தை விரட்டவேண்டும். மாயக ஒரு பகுதியில் இருந்து விரட்டி விட்டு மறுபகதியில் தொடர்ந்து அனுபவிக்க அனுமதிப்பது போன்டறல்லவா இவர்களுடைய தமிழ் ஈழப் போராட்டமும், ஏகாதிபத்திய உணர்வும் இருகின்றது. அத்துடன் எந்த ஏகாதிபத்தியத்தையும் தமிழ் ஈழ மண்ணில் அனுமதிக்க மாட்டோம் எனக் கூறும் இவர்கள் இரஷ்ய சமூக ஏகாதிபத்தியம் பற்றி எதுவிம் கூற மறுக்கின்றனர். மேலும் சில தமிழ ஈழம் கோரும் அமைப்புக்கள் பகிரங்க மாகவே சமூக ஏகாதிபத்தியத்தை எதிர்த்த போராட்டம் என்பதும் இவர்களுடைய ஏகாதிபத்திய எதிர்ப்பும் ஏற்றுக் கொள்ள முடியாதைவையாகும்.

**(5)மக்கள் ஜனநாயகக் குடியரசு அல்ல முதலாளிய அரசையே முன்வைக்கிறுர்கள்:**

ஐந்தாவதாக தமிழ் ஈழம் ஒரு ஜனநாயகக் குடியரசாகவும் பின்னர் ஒரு சோசலிஸக் குடியரசாகவும் அமையும் என்கின்றனர். இவர்களைப் பொறுத்தவரை தமிழ் ஈழத்தை ஜெயவர்த்தனு அரசை எதிர்த்த போராட்டத்தில் பெறவிரும்புகின்றனரேயனறி ஜெயவர்த்தனு அரசின் அழிவியல் அல்ல இவ்வகையில் சிங்கள மக்களுக்கு எதிராக ஜெயவர்த்தனு அரசுடன் ஓர் உடன்பாட்டுக்கு வரவே இவர்கள் விரும்புவிறுர்கள். இவர்களுக்கு இலங்கையில் உள்ள தமது சகோதர சிங்கள மக்களைப் பற்றி அக்கறையில்லை. தமது இனத்தைப் பற்றி மட்டுமே அக்கறை இது அபட்டமான பூர்ஷ்வா தேசிய வாதமன்றி வேறல்ல.

**(6) சிங்கள மக்களையும் சகோதரர்களாக பார்க்கின்றுர்களா?**

ஆருவதாக இலங்கை ஆளும் வர்க்கமும், அதன் ஏவல் நாய் இராணுவமும் தான் தனது எதிரிகள் என்றும் சிங்கள உழைக்கும் மக்கள் தமது சகோதரர்கள் என்றும் இவர்கள் கூறுகின்றனர். உண்மையில் இவர்கள் சிங்கள மக்களை சகோதரர்களாக கருதுவார்களாயின் ஏன் இவர்களிடம் இருந்து பிரிந்து தனிநாடு கோருகின்றனர்? இவருக்கும் பொது எதிரியாய் இருக்கும் பாசிஸ இனவெறி அரசை தூக்கியெறிந்துவிட்டு, இருவருக்கும் ஜனநாயகமும், சமத்துவமும் தரக்கூடிய ஒரு மக்கள் ஜனநாயகக் குடியரசாகப் போராடாமல், இலங்கை அரசுடன் உடன்பாட்டுக்கு வரும் கோரிக்கையான தமிழ் ஈழ நாட்டுக்காக ஏன் போரட வேண்டும்? ஒரே அரசு எல்லைக்குள் இருந்து கொண்டு அவர்களிடம் இருந்து பிரிந்து செல்வதற்கும், அவர்களுடைய எதிரியுடன் எடன் பாட்டுக்கு வருவதற்குமான கோரிக்கையை முன் வைத்துப் போராடிக் கொண்டே சிங்கள மக்கள் எமது சகோதரர்கள் என்று கூறும் இவர்கள் கூற்று வெறும் வாய்ச் சொல்லன்றி வேறு எதுவாக இருக்க முடியும்?

**(7) இனவாதம் இனவெறித் தீர்வாகுமா?**

ஏழாவதாகசிங்கள மக்களை இனவெறியில் இருந்து மீட்டெடுக்கும் செயலை தமிழீழ விடுதலைப் போராட்டமே செய்யும் என்கின்றனர். உண்மை என்னவெனில் சிங்கள மக்கள் அனைவரும் இன வெறியர்களாயிருந்திருப்பின் ஒரு தமிழர் கூட இலங்கையில் உயிர்வாழ

www.tamilarangam.net

முடியாது என்பதையும் தமிழ் மக்கள் இனவெறிதாக்குதலுக்கு உள்ளாகும் போதெல்லாம் அவர்களுக்கு உதவியும், பாதுகாப்பும் அளித்த சிங்கள மக்களைப் பற்றியும் ஏராளமான செய்திகளை யாரும் மறுக்கவில்லை என்பதையும் இலங்கை அரசின் ஒடுக்கு முறைக்கு எதிராக சிங்கள மக்கள் போராடி கடும் ஒடுக்கு முறையைச் சந்தித்து வருகிறார்கள் எனபதையும் சிங்கள மக்களிடையேயுள்ள தொழிற்சங்கங்கக் கூட்டமைப்புக்கள் தமிழ் மக்கள் மீதான ஒடுக்கு முறையைக் கண்டித்திருக்கின்றன என்பதையும் முன்னரே சுட்டிக் காட்டினோம்.

எனவே சிங்கள மக்கள் அனைவரும் இனவெறியில் மூழ்கியிருப்பதாக சித்தரிப்பது உண்மைக்கு புறம்பானது. இது ஒருபுறம் இருக்க தமிழ் ஈழப் போராட்டம் சிங்கள மக்களிடையே தமிழ் மக்கள் மீது அவநம்பிக்கையையும் பகையையும் ஊட்ட ஆளும் வர்க்கங்களால் வெற்றிகரமாக பயனபடுத்தப்படும், பயன்படுத்தப்பட்டு வருகின்றது. இது இயல்பானதே. எனவே தமிழ் ஈழப் போராட்டம் சிங்கள மக்களை இனவெறியில் இருந்து மீட்பதற்கு அல்ல மாறாக மேலும் அவர்களிடையே இனவெறியைப் பரப்புவதற்கு மட்டுமே பயனபடும் என்பதை இவர்கள் உணர மறுப்பதேன்?

(8) பிரிவினைக் கோரிக்கை பொதுவான கோரிக்கையா?

எட்டாவாக சிங்கள தமிழ் மக்களின் ஒன்றுன திட்டமே தமிழ் ஈழப் போராட்டம் என்கிறார்கள். தமிழ் ஈழப் போராட்டம் சிங்கள இனவெறி அரசுடன் ஒரு உடன் பாட்டிற்கு வருவதற்கான போராட்டம். இது சிங்கள தமிழ் உழைக்கும் மக்களுக்கான பொதுவான திட்டமாக எவ்வாறு இருக்க முடியும்? தமிழ பூர்ஷ்வா தேசியவாதக் கோரிக்கையையே தமிழ் சிங்கள உழைக்கும் மக்களின் பொதுவான திட்டம் எனக் கூறுவது பூர்ஷ்வா தேசியவாத நலனை வெளிப்படுத்துகிறதேயன்றி தமிழ் சிங்கள மக்களின் பொதுவான நலனை அன்று.

மேலும் தமிழ் ஈழ தனி நாட்டுக்காகப் போராடும் பெரும்பாலான அமைப்புக்கள் இந்திய அரசை நம்பிக்கை நட்சத்திரமாகக் காட்டுகின்றனர். எனவே தமிழ் மக்களின் விடுதலைக்கு இந்திய அரசு உண்மையிலேயே நம்பிக்கை நட்சத்திரமா? என்பதை ஆராய வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது.

---

**என்னை நீ பழிப்பதறிவு இல்லாமல் வைத்திருப்பது; என்றால், நீ செய்யும் பிழைகளை பகுத்தறிய முடியாதிருக்கும்.**

?? ராஜீவ் போன்ற பெரிய கட்சிகளின் தலைவர்கள் குண்டு வைத்து கொலை செய்யப்படுவதேன்? இதற்குமுன் இந்திரா காந்தி துப்பாக்கியால் சுட்டுக் கொல்லப்பட்டார். இதுபோன்ற பயங்கரவாதச் செயல்கள் மூலம் நாட்டில் சமூக மாற்றத்தினைக் கொண்டு வந்துவிட முடியுமா? இதை நீங்கள் ஆதரிக்கிறீர்களா?

*மாரிமுத்து, நீலகிரி.*

ராஜீவ், இந்திரா போன்றவர்கள் கொலை செய்யப்படுவது போன்ற பயங்கரவாதச் செயல்கள் மூலம் சமூக மாற்றத்தைக் கொண்டுவந்துவிட முடியாது. ராஜீவ்காந்தியை கொலை செய்தவர்கள் இக்கொலை மூலம் ஒன்று அவர் மீண்டும் பதவிக்கு வருவதைத் தடுப்பதை நோக்கமாகக் கொண்டிருக்க வேண்டும். அல்லது அவரு டைய ஆட்சிக் காலத்தில் அவர் செய்த அக்கிரமங்களுக்குப் பழி வாங்குவதை நோக்கமாகக் கொண்டிருக்க வேண்டும். எதுவாயினும் அவர்கள் நோக்கம் சமூக மாற்றம் அல்ல. சாதாரண பஞ்சாயத்து போர்டு தலைவர் பதவிக்காகவும் எம்.எல்.ஏ. பதவிக்காக வும் நடக்கும் போட்டியிலேயே கத்திக்குத்து, துப்பாக்கிச் சூடு கொலைகள் நடக்கும் போது நாட்டின் தலைமைப் பதவிக்கான போட்டியில் இத்தகைய கொலைகள் அதிசயமானதல்ல. பதவிகள் தமது வர்க்கப் பிரிவின் நலனைப் பாதுகாத்துக் கொள்ளவும் தமது போட்டியாளரை ஒடுக்கவும் கூடுதல் சாதனமாக அமைவதால் அப் பதவிகளைப் பெறுவதற்கான போட்டியில் வெறும் ஓட்டுப் பெட்டிகளை மட்டும் இவர்கள் நம்புவதில்லை. அவசியமானால், சாத்தியமானால் துப்பாக்கிகளையும், வெடி குண்டுகளையும்கூட இவர்கள் கையில் எடுத்துக் கொள்கிறார்கள்; பயங்கரவாத வழிமுறைகளை மேற்கொள்கிறார்கள்.

எவ்வாறாயினும் இத்தகைய பயங்கரவாதச் செயல்கள் எதிரி முகாமில் இழப்புகளை ஏற்படுத்தவே செய்கின்றன. இதற்காக நாம் அனுதாபப்பட முடியாது. காரணம் மிக எளிமையானது - இழப்பு எதிரிவர்க்க முகாமில் ஏற்பட்டிருக்கிறது என்பது தான். அதற்காக நாம் மகிழ்ச்சியடையவும் முடியாது. காரணம் மக்கள் மத்தியில் அம்பலப்படுத்தி தூக்கி எறியப்பட வேண்டிய பாசிச சக்திகள் இத்தகைய பயங்கரவாதச் செயல்களால் ஏற்படும் மரணங்களைப் பயன் படுத்தி வர்க்க உணர்வும், அரசியல் உணர்வும் பெறாத மக்களின் பின்தங்கிய, பிற்போக்கான உணர்வுகளைத் தூண்டிவிட்டு தம்மைப் பலப்படுத்திக் கொள்கின்றன என்பதே. இது மக்களின் அரசியல் உணர்வை ஒருபடி பின்னுக்குத் தள்ளவே பயன்படுகின்றது. இத்தகைய பயங்கரவாதச் செயல்கள் எதிரிகளை பலவீனப்படுத்துவதைவிட மொத்தத்தில் பலமடையவே உதவுகின்றன. எனவே இத்தகைய பயங்கரவாதச் செயல்களை நாம் ஆதரிப்பதில்லை.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்